நாட்டுக்கோழிகளின் இனப்பெருக்க பராமரிப்பு முறைகள் மற்றும் கோழிகளில் செயற்கை முறை கருவூட்டல்

முனைவர். ஆ.கிருபாகரன், உதவிப் பேராசிரியர்,
கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், ஈரோடு.

நாட்டுக்கோழிக்கோழிகளை இயற்கையாக திறந்த வெளி முறையிலோ அல்லது பண்ணை முறையிலோ பராமரிக்கலாம். பண்ணை முறையில் வளர்க்கும் பொழுது, அதாவது தரைத்தளத்தில், தேங்காய் மஞ்சி, நிலக்கடலை தோல், நெல் உமி போன்றவற்றை பரப்பி தாய்க்கோழிகளை பராமரிக்கும் பொழுது, 10 பெட்டைக்கோழிகளுக்கு ஒரு சேவல் என்ற விகிதத்தில் பராமரிக்க வேண்டும். ஒரு தாய்க்கோழிக்கு சுமார் 2 முதல் 2.5 சதுர அடி என்ற விகிதத்தில் இடவசதி கொடுக்க வேண்டும். நாட்டுக்கோழிகளில் பெட்டைக்கோழிகள் சுமார் 6 மாத வயதில் முதன் முதலாக முட்டை இடத் தொடங்கும். அக்கால கட்டத்தில் சேவலை பெட்டைக்கோழிகளுடன் சேர்த்து பராமரிக்க வேண்டும்.

பெட்டை கோழிகளானது, ஆறு மாத வயதிற்கு முன்பாக சேவல்களை இணை சேர அனுமதிக்காது. இனப்பெருக்க காலத்தில் சேவலானது, பெட்டைக் கோழிகளை, சுற்றி வந்து இனக்கவர்ச்சியில் ஈடுபடும். அவ்வாறான சமயத்தில், பெட்டைக்கோழியானது, சேவலை நமது முதுகுப் பகுதியில் மேல் அமர அனுமதித்து, இரு கால்களை மடித்து தரையின் மேல் அமர்ந்து கொள்ளும். மேலும் சேவலானது முதுகின் மேல் அமர்ந்து, பெட்டைக் கோழிகளின் தலைப்பகுதியில் தமது அலகால் கவ்வி தம்மை நிலைப்படுத்திக் கொள்ளும். அதே சமயத்தில் பெட்டைக் கோழியானது, தமது வால் பகுதியினை ஒரு பகுதியில் சாய்த்து சேவலின் குதப்பருதியானது, தமது குதப்பகுதியுடன் பொருந்துவதற்கு அனுமதித்து விந்துவானது முட்டைக்குழாய் பகுதிக்குள் செல்வதற்கு அனுமதிக்கும். அவ்வாறு உட்செல்லும் விந்துவானது, மூன்று நாட்கள் வரை உயிர்ப்புடன் காணப்படும். அச்சமயத்தில் உற்பத்தியாகும் கருமுட்டையுடன் தகுதியான விந்தனுவானது இணை சேர்ந்து நமக்கு கருவுற்ற முட்டை கிடைக்கின்றன. பிறகு 3 நாட்கள் கால இடைவெளியில் மீண்டும் சேவலுடன் இணை சேர்வதால், திரும்பவும 3 நாட்கள் வரை கருவுற்ற முட்டையானது கிடைக்கும்.

சேவல் மற்றும் பெட்டைக் கோழிகளை தேர்வு செய்தல்:

இனவிருத்தி பண்புகள் கொண்ட சேவல் மற்றும் பெட்டைக் கோழிகளை தேர்வு செய்தல் அவசியம் ஆகும். சேவல்களை சுமார் 8 மாத வயதில் பெட்டைக் கோழிகளுடன் இணை சேர்வதற்கு பயன்படுத்தலாம். நல்ல எடையுடன் உள்ள சேவல்களை தேர்வு செய்தல் அவசியம் ஆகும். சேவல்களுக்கு கால்கள் வலுவுடனும், அகன்ற மார்பும், நேரான முதுகுப் பகுதியும், உடலமைப்பு குறைபாடுகள் அற்றதாகவும் இருக்க வேண்டும். செயற்கை முறை கருவூட்டல் செய்வதற்கு தேவையான விந்துவை கொடுக்கும் தகுதியும் படைத்ததாகவும் இருக்க வேண்டும். பெட்டைக்கோழிகளை தேர்வு செய்யும் பொழுது, நல்ல எடையுடனும் எவ்வித நோய் அறிகுறிகளின்றியும் நன்கு தீவனம் மற்றும் தண்ணீர் உட்கொள்ளும் பண்புகளுடனும், பின்பக்க வால்பகுதி நான்கு விரல்கள் அளவுக்கு பரப்பளவுள்ளதாகவும், சுறுசுறுப்பு தன்மை கொண்டதாகவும் இருக்க வேண்டும். சேவல்களின் கால்களில் குறைபாடுகள் இருப்பின் பெட்டைக் கோழிகளுடன் இணை சேர்வதில் குறைபாடுகள் காணப்படும். அவ்வாறான சமயத்தில் குறைந்த அளவு கருவுற்ற முட்டைகளே நமக்கு கிடைக்கப்பெறும்.

பண்ணையின் முட்டை உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கு, உற்பத்தி திறன் குறைந்த கோழிகளை தோற்றப்பண்புகளின் அடிப்படையில் பண்ணையிலிருந்து கழித்து விடுதல் வேண்டும். உடல் எடையின் அடிப்படையில், முட்டை இடப்போகும் தாய்க்கோழிகளை தரம் பிரித்தல் வேண்டும். மேலும், நலிவுற்ற கோழிகளை பண்ணையிலிருந்து கழித்து விடுதல் வேண்டும்.

ஒளி மேலாண்மை:

பண்ணை முறையில் வளர்க்கப்படும் முட்டையிடும் நாட்டுக்கோழிகளுக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 16 மணி நேரம் ஒளி தேவைப்படுகின்றது. இயற்கையாக கிடைக்கும் 12 மணி நேர ஒளியுடன் மீதம் உள்ள நான்கு மணி நேர ஒளியை, குழல் விளக்குகளை பயன்படுத்தி காலை 2 மணி நேரமும் மாலை 2 மணி நேரமுமமாக கொடுத்தால், ஒளியானது கண்களின் வழியாக மூளையில் தூண்டுதலை ஏற்படுத்தி முட்டை உற்பத்தியை அதிகரிக்கின்ற தூண்டுதலை ஏற்படுத்தி முட்டை உற்பத்தியை அதிகரிக்கின்றது.

பெட்டைக்கோழிகள் முட்டை இடத் தொடங்கும் சமயத்தில், அங்காங்கே மூங்கில் கூடைகள் அல்லது வாய் அகன்ற மணல் அல்லது உமி நிரப்பப்பட்ட பானைகளை வைக்க வேண்டும். அவ்வாறு வைக்கும் பொழுது, பெட்டை கோழிகள் சரியாக அதனுள் சென்று முட்டைகளை இட்டு திரும்பும். கூடைகள் அல்லது பானைகள் வைக்கவில்லையெனில், முட்டைகளை ஆழ்கூளப்பரப்பில் ஆங்காங்கே இட்டு விடும். அதனால், முட்டைகள் சேதமடைவதுடன், கோழிகளின் எச்சமும் அதன் மேல் படுவதற்கு ஏதுவாக அமைந்து விடும். முட்டைகளை நாள் ஒன்றுக்கு இரண்டு அல்லது மூன்று முறை சேகரித்து குளிர் அறையில் பாதுகாத்து வைக்க வேண்டும். புதிதாக இடப்பட்ட முட்டைகள், சிறிது நேரத்திற்கு இளம் சூடாகவும், முட்டை ஓட்டின் துளைகள் திறந்த நிலையில் இருக்கும். அப்பொழுது முட்டையானது தூய்மையற்ற பகுதியில் இடப் பட்டால் தூசுகள் மற்றும் அழுக்குகள் முட்டை ஓட்டின் துளைகள் வழியாக உட்புகுந்து முட்டையின் தரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். மேலும் அதன் குஞ்சு பொரிக்கும் திறனும் பாதிப்படையும். பெட்டைக்கோழிகளின் முட்டை உற்பத்தி செய்யும் முட்டைக் குழாயின் வழியாக உருண்டு வரும் முட்டையானது, எச்சம் வெளியேற்றும் குதத்தின் வழியாக வெளிவரும் பொழுது, சில நேரங்களில் எச்சமானது, முட்டை ஓட்டின் மீது படிந்து விடும்.

சேகரிக்கப்படும் முட்டைகளை குளிர்பதன அறையில் வைப்பதற்கு முன்பாக தரப்பரிசோதனை செய்வது அவசியம் ஆகும். முட்டை ஓடுகளின் மீது எச்சம் படிந்திருந்தாலோ அல்லது வேறு தூய்மையற்ற பொருட்கள் படிந்திருந்தாலோ உப்பு காகிதத்தின் உதவியுடன், அதனை தூய்மைப் படுத்த வேண்டும். அழுக்கான முட்டைகளை கிருமி நாசினி கரைசலை தெளித்தோ அல்லது அதில் மூழ்கி எடுத்தோ முட்டைகளை தூய்மைப்படுத்தலாம்.

குஞ்சு பொரிப்பதற்காக பயன்படுத்தும் முட்டைகளை பொட்டாசியம் பர்மாங்கனேட் மற்றும் பார்மலின் கரைசலின் உதவியுடன் புகை மூட்டம் ஏற்படுத்தி முட்டைகளின் ஓட்டுப்பகுதியில் உள்ள கிருமிகளை அழிக்கலாம்.

பண்ணைகளில் சேகரிக்கப்படும் முட்டைகளை முட்டைகள் வைக்கும் அட்டைகளில் முட்டையின் குறுகிய பாகம் கீழ்நோக்கியும், முட்டையின் அகன்ற பகுதி மேல் நோக்கியும் இருக்கும் படி வைத்து குளிரான அறையில் பாதுகாப்பாக ஆறு அல்லது ஏழு நாட்கள் வரை வைக்கலாம். முட்டைகளை ஆறு அல்லது ஏழு நாட்களுக்கு மேல் குளிரான அறையில் வைத்தால், அதன் குஞ்சு பொரிக்கும் திறன் குறைவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

அடை முட்டையின் தரத்தை பரிசோதித்தல்:

நாட்டுக்கோழி முட்டைகள் பழுப்பு நிறத்தில் உள்ளதால் ஒளியின் மூலம் தரப்பரிசோதனை செய்வது கடினம் ஆகும். குஞ்சு பொரிப்பானில் உள்ள ஏழாவது நாள் முட்டையை துளையிடப்பட்ட பெட்டியின் மேல் வைத்து, கீழிலிருந்து ஒளியை செலுத்தினால், கரு வளர்த்த முட்டையாக இருந்தால், இரத்த நாளங்கள் நன்கு தெரியும் நிலையில் இருக்கும்.

குஞ்சு பொரிக்கும் முறை:

அடைக்கோழியை பயன்படுத்தியோ அல்லது குஞ்சு பொரிப்பானை பயன்படுத்தியோ, முட்டைகளை பொரிக்க வைக்கலாம். அடைக்கோழிகளில் 10 முதல் 15 முட்டைகள் வரை குஞ்சு பொரிக்க பயன்படுத்தலாம். குஞ்சு பொரிப்பானில் அதிக எண்ணிக்கையிலான முட்டைகளை 21 நாட்கள் வரை வைத்து குஞ்சு பொரிக்க வைக்கலாம்.

இனப்பெருக்கதிறன் குறைவதற்கான காரணங்கள்:

இனப்பெருக்க திறன் குறைவதற்கு, சேவல்-பெட்டைக் கோழிகள் விகிதாச்சார குறைபாடு, சேவல்கள் மற்றும் பெட்டைக் கோழிகளின் அதிக உடல் எடை போன்ற பல்வேறு காரணிகள் உள்ளன. இனப்பெருக்க காலத்தில், தகுந்த காரணம் இன்றி, இணை சேர்வது தவிர்க்கப்படுவதன் காரணமாக குறைவான கருவுற்ற முட்டைகள் கிடைக்கின்றன. மேலும், இனப்பெருக்க திறன் குறைந்த சேவல்இ பெட்டை கோழிகள் தீவனம் மற்றும் தண்ணீர் உட்கொள்வதை தடை செய்யும் சேவல்களாலும் கருவுற்ற முட்டை உற்பத்தி திறன் பாதிக்கப்படுகின்றது. மேலும், நோய் பாதித்தல், கால்களில் ஏற்படும் குறைபாடுகள், குறைந்த அளவு தண்ணீர் உட்கொள்தல், குறைந்த தீவனம் அதனைத் தொடர்ந்து ஏற்படும் எடை இழப்பு போன்ற காரணிகளால் சேவல்களில் விந்து உற்பத்தியானது தடைபடுகின்றது. குறைந்த இடவசதி மற்றும் தீவனத்தை தீவனத் தொட்டியில் உட்கொள்ள வழங்கப்படும் குறைந்த இடவசதி போன்ற காரணிகளாலும் சேவல்களில் எடை குறைந்து விந்து உற்பத்தியானது பாதிக்கப்படுகின்றது.

பெட்டை கோழிகளின் தீவனத்தில் குறைந்த அளவு எரிசக்தி அல்லது புரதச்சத்து, அதிக குளிர் காலம் மற்றும் அதிக வெப்பகாலங்களிலும், குறைந்த அளவே கருவுற்ற முட்டைகள் கிடைக்கின்றன. பெட்டை கோழிகள் தமது முதுகில் சிறகுகள் அற்ற நிலையில், சேவலை தமது முதுகுப் பகுதியில் அமர்ந்து இணை சேர்வதற்கு அனுமதிக்காது. சிறகுகளற்ற பகுதியில், சேவலின் மூலம் சிராய்ப்பு அல்லது புண் ஏற்பட்டு வலி ஏற்படுவதால், அச்சத்தின் காரணமாக, பெட்டை கோழிகள் இணை சேர்வதை தவிர்க்கின்றன. ஈரப்பதமான சூழ்நிலையில், பெட்டைக் கோழிகள் அதிகளவு தீவனம் உட்கொள்வதால், அதன் எடை கூடி அதன் காரணமாகவும், இனப்பெருக்கத் திறனில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

செயற்கை முறை கருவூட்டல்:

வணிக ரீதியான நாட்டுக்கோழி பண்ணைகளில் செயற்கை முறை கருவூட்டல் செய்வதன் மூலம் பெட்டைக் கோழிகளில் இனவிருத்தி திறனை அதிகப்படுத்தி அதிகளவு கருவுற்ற முட்டைகளை பெறுவதுடன், அதிகளவு கோழிக்குஞ்சுகளையும் பெறலாம். இயற்கையான முறையில், கருவுற்ற முட்டைகள் அதிகளவு கிடைப்பதில்லை. ஆதலால், பண்ணையின் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் காண செயற்கை முறை கருவூட்டல் செய்வது அவசியம்.

விந்தணுக்களை சேகரிக்கும் முறை:

நாட்டுக்கோழி சேவல்களில் விந்தணுக்களை சேகரிப்பதற்கு முன் அதற்கு நன்கு பயிற்சி அளித்து விந்தணுக்களை கொடுப்பதற்கு பழக்கப்படுத்த வேண்டும். ஆரம்ப பயிற்சிகளின் பொழுது, விந்தணு சேகரிப்பவர் தமது தொடைகளின் மீது சேவலை அதன் அடிவயிறு ஒட்டிய நிலையில் வைக்க வேண்டும். பிறகு, மெதுவாக பயிற்சி அளிப்பவர் தமது இடது கையில் சேவலின் முதுகில் விந்தகங்கள் உள்ள பகுதியின் மேல் தடவி விடுதல் வேண்டும். அதே சமயம், வலது கையால், சேவலின் அடி வயிற்றில் மெதுவாக தடவி கொடுத்தவாறே, இனப்பெருக்க உறுப்பு அமைந்துள்ள சேவலின் குதப் பகுதியில், பெருவிரல் மற்றும் ஆட்காட்டி விரலை பயன்படுத்தி, சிறிய அழுத்தம் கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம், விந்தனுவானது, பால் போன்ற நிறத்தில் எச்சம் வெளியேறும் பாதையில் வெளியேறும். அவ்வாறு வெளியேறும் தூய்மையான விந்துணுவை சிறிய கண்ணாடியிலான கலனில் கவனமாக சேகரிக்க வேண்டும். சேவலின் விந்தவுடன் எவ்வித தூசுக்களோ அல்லது எச்சமோ கலக்காதவாறு கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும்.

விந்து சேகரிப்பவர், தமது உயரத்திற்கு ஏற்புடைய மேஜையின் மீது சேவலை அமர வைத்து, தமது இடக்கையின் பெருவிரல் மற்றும் ஆள்காட்டி விரலை பயன்படுத்தி சேவலின் குதப்பகுதியில் மெதுவாக அழுத்தம் கொடுக்க வேண்டும். அதே சமயம் வலது கையால் விந்து சேகரிக்கும் கண்ணாடி கலனை பிடித்தவாறு, வலது கையின் பெருவிரல் மற்றும் ஆட்காட்டி

நாட்டுக்கோழி வளர்ப்பில் கோழிக்குஞ்சுகளின் இறப்பை குறைக்க வழிமுறைகள் மற்றும் குடிநீர் மேலாண்மை

முனைவர். மா. அர்த்தனாரிஈஸ்வரன்,
கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆரய்ச்சி நிலையம், திருப்பூர்.

பொதுவாக கிராமப்புறங்ககளில் வீடுதோறும் புறக்கடையில் நாட்டுக்கோழிகள் இறைச்சிக்காக வளர்க்கப்படும். இவ்வாறு நாட்டுக்கோழிகளை வளர்க்க எவ்வித பெரிய தொழில்நுட்பமும் தேவைப்படுவதில்லை. வீட்டிலுள்ள இடுபொருட்களைக் கொண்டே நாட்டுக்கோழிகள் வளர்க்கப்படுகின்றன. குறைந்த எண்ணிக்கையில் நாட்டுக்கோழிகள் வளர்க்கப் படும் போது பெரிய அளவில் எந்தவித பராமரிப்பும், கண்காணிப்பும் தேவையில்லை. ஆனால் அதிக எண்ணிக்கையில் நாட்டுக்கோழிகள் வளர்க்கும் போது சீரிய முறையில் பராமரிக்கப் படவேண்டும். நாட்டுக்கோழிக் குஞ்சுகளை வளர்க்கும் முறை பற்றி இங்கே விளக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்கோழிகளில் பிறந்த முதல் நாள் வயதிலிருந்து 4 வார வயதுள்ள கோழிக்குஞ்சுகள் "இளங்குஞ்சுகள்" என்று அழைக்கப்படுகின்றன. புறக்கடைகளில் வளர்க்கப்படும் நாட்டுக் கோழிகளின் குஞ்சுகளுக்கு செயற்கை வெப்பம் அளிக்கப்படுவதில்லை. தாய்க்கோழியே தனது இறகுகளினால் மூடி குஞ்சுகளுக்குத் தேவையான வெப்பத்தையும், பாதுகாப்பையும் அளிக்கிறது. வணிக நோக்கில் பண்ணைகளில் அதிக எண்ணிக்கையில் நாட்டுக் கோழிக்குஞ்சுகள் பராமரிக்கப்படும் போது செயற்கை வெப்பம் அளிக்கப்படுகிறது.

குஞ்சுகள் பண்ணக்கு வரும் முன் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள்

1. குஞ்சுகளுக்கான கொட்டகையைத் தயார் செய்தல்

புதிய பண்ணையாக இருந்தால் நன்றாகக் கழுவி, சுத்தம் செய்து சுண்ணாம்பு கொண்டு வெள்ளையடிக்க வேண்டும். பழைய கொட்டகையாக இருந்தால் எருவைக் குவித்து வைத்து, ஒரு வாரத்திற்கு அப்படியே மக்க செய்து பின் எருவை அப்புறப்படுத்தவேண்டும். பிறகு கொட்டகையில் உள்ள தண்ணீர் மற்றும் தீவன பாத்திரங்களை வெளியே எடுத்து தண்ணீர் கொண்டு கழுவி பின் கிருமிநாசினி கலந்த தண்ணீரில் ஊறவைத்துக் கழுவி சுத்தப்படுத்த வேண்டும். பிறகு அவற்றை சூரிய ஒளியில்/வெயிலில் உலர்த்தி தயராக வைத்திருக்க வேண்டும். பழைய ஆழ்கூளத்தை அகற்றி, நெருப்பு கொண்டு ஒட்டடைகளை நீக்கி அதன் பின் கொட்டகையைத் தண்ணீர் விட்டுக் கழுவி காயவிடவேண்டும். பின்னர் கொட்டகைக்கு சுண்ணாம்பு வெள்ளையடிக்க வேண்டும். கொட்டகை வாயிலில் கிருமிநாசினி நிரப்பிய கால்வாய் தயார் செய்வதால் கிருமிகள் உள்நுழைவதைப் பெருமளவில் குறைக்கலாம்.